# உலக ‘செஸ்’ விளையாட்டின் தலைநகராக தமிழ்நாடு திகழட்டும்!

# ‘உலக செஸ் சாம்பியன்’ குகேஷின் வெற்றி, ‘செஸ்’ போட்டியை தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் கொண்டு சேர்க்கட்டும்!

## சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை,டிச.18-**

**சென்னை, கலைவாணர் அரங்கில் நேற்று (17.12.2024) இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில், உலக செஸ் சாம்பியன் டி. குகேஷ் அவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நடைபெற்ற இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விழாவுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார்.**

**விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:**

தமிழ்நாட்டில் இருந்து புறப்பட்டுச் சென்று இன்றைக்கு ஒட்டுமொத்த தமிழ்நாட்டையும், இந்திய ஒன்றியத்தையுமே உலகளவில் திரும்பிப் பார்க்கின்ற வகையில் சாதனை படைத்துள்ள தம்பி குகேஷிற்கு பரிசுத் தொகை வழங்கி பாராட்டுகின்ற விழாவில் வரவேற்புரை ஆற்றுவதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். பெருமை அடைகிறேன்.

தன் 18-வது வயதில் 18-வது `உலக செஸ் சாம்பியன்’ என்று உயர்ந்து நிற்கும் தம்பி குகேஷைப் பார்த்து ஒட்டுமொத்த இந்தியாவும், தமிழ்நாடும் இன்றைக்குப் பெருமை கொள்கிறது.

**செஸ் என்றால் சென்னை**

உலகளவில், `செஸ் என்றால் சென்னை, சென்னை என்றால் செஸ்’ என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகின்ற வகையில், தம்பி குகேஷின் சாதனை இன்றைக்கு அமைந்திருக்கிறது. தம்பி குகேஷின் திறமையை அவரின் பெற்றோர் இளம் வயதிலேயே கண்டறிந்து, அவரை ஊக்குவித்து, இன்றைக்கு இந்த உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். அவர்களின் அர்பணிப்புக்கு இந்த நேரத்தில், நாம் அனைவரும் நம் கைத் தட்டல்களின் வாயிலாக நன்றியைத் தெரிவித்துக்கொள்வோம்.

**மகிழ்ச்சிக் கடலில் முதலமைச்சர்**

எப்படி குகேஷின் சாதனையைக் கண்டு




அவர்களின் பெற்றோர்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறார்களோ? அதே உணர்வோடுதான் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், நம் திராவிட மாடல் அரசும் இன்றைக்கு மகிழ்ச்சியோடு இருக்கிறது. நேற்று, விமான நிலையத்தில் இருந்து அவர் திரும்பியபோது, வழிநெடுக நம் சென்னை மக்கள் அவருக்குச் சிறப்பான வரவேற்பைக் கொடுத்து இருக்கிறார்கள். அவரின் சாதனையை, தமிழ்நாடு தன்னுடைய சாதனையாக இன்று கொண்டாடிக்கொண்டு இருக்கிறது.

`சென்னை செஸ் மாஸ்டர்ஸ் போட்டி’ சென்ற வருடம் நடந்தபோது, உலக செஸ் சாம்பியன் சிப் போட்டிக்குச் செல்லும் முன்பே, தம்பி குகேஷ் அவர்களுக்கு நம் `திராவிட மாடல் அரசு’, நம் முதலமைச்சர் அவர்கள் ஊக்கத்தொகை வழங்கினார்.

**கோடி கொடுத்தாலும் ஈடாகாத வெற்றி!**

தம்பி குகேஷுக்கு எத்தனை கோடி கொடுத்தாலும், ஈடாகாத ஒரு மாபெரும் வெற்றியை நமக்காக வாங்கி வந்துள்ளார். அதனால்தான் எல்லோரும் பாராட்டிக் கொண்டிருந்த போது, நம் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு சார்பாக, பாராட்டுடன் சேர்த்து, உடனடியாகப் பரிசுத்தொகையையும் அறிவித்தார்.

**சீனியர் சாம்பியன் சிப்!**

11 வயதில் ஜூனியர் சாம்பியன் சிப் போட்டியில் வெற்றிக் கணக்கைத் தொடங்கிய தம்பி குகேஷ், இன்றைக்கு 18-வது வயதில் சீனியர் சாம்பியன் சிப்பிலும் சாதித்துக் காட்டி இருக்கிறார். அவர் இன்னும் பல்வேறு சாதனைகளைப் படைக்கட்டும். அவருக்கு நம் கழக அரசும், நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் என்றைக்கும் துணை நிற்பார்கள். அவரின் வெற்றி தொடரட்டும்.

**பட்டிதொட்டி எங்கும் செஸ்!**

கிரிக்கெட் எப்படி இன்றைக்குப் பட்டித் தொட்டி எங்கும் சென்று சேர்ந்து இருக்கிறதோ? அதேபோல் தம்பி குகேஷின் வெற்றி, இன்றைக்கு செஸ் போட்டியையும் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் சென்று சேர்க்கும் என்பது உறுதியாகி இருக்கிறது. அதன் தொடர்ச்சியாக, இன்னும் பல நூறு கிராண்ட் மாஸ்டர்கள் நம் கிராமப்புறங்களில் இருந்து வருவார்கள்.

தமிழ்நாடு, ஒரு நாள் உலகின் செஸ் தலைநகராக உயரட்டும். அதற்கு நாம் அனைவரும் சேர்ந்து ஒன்றிணைந்து பாடுபடுவோம். அந்தச் சாதனைப் பயணத்தை நோக்கி, நம்மை வழிநடத்திக்கொண்டு இருக்கின்ற நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இந்தச் சிறப்புக்குரிய நிகழ்ச்சிக்கு வருக, வருக என வரவேற்கிறேன்.

மேலும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணைமேயர் உள்ளிட்ட அனைத்து மக்கள் பிரதிநிதிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

> **“குகேஷின் சாதனையைக் கண்டு அவர்களின் பெற்றோர்கள் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கிறார்களோ? அதே உணர்வோடுதான் நம் முதலமைச்சர் அவர்களும், நம் திராவிட மாடல் அரசும் இன்றைக்கு மகிழ்ச்சியோடு இருக்கிறது.”**

**வருக, வருக என வரவேற்கிறேன்!**

நம் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் புதிய முன்னெடுப்புகளுக்குக் காரணமாகத் திகழும் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்யா மிஸ்ரா ஐ.ஏ.எஸ். அவர்களையும், தமிழ்நாடு பல சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்த அயராது உழைத்து வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

தமிழ்நாடு அரசின் அனைத்துத்துறை அதிகாரிகள் மற்றும் பல்வேறு நாடுகளின் தூதரக அதிகாரிகளையும் வருக, வருக என வரவேற்கிறேன். உலக அளவிலான செஸ் போட்டிகளில் சாதனை எனும் தொடர் ஓட்டத்தில், தான் ஏந்திய ஜோதியை அடுத்ததடுத்த இளம் தலைமுறையினரின் கைகளில் ஒப்படைத்து, அவர்களின் வெற்றியிலும் மனம் மகிழும் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாத் ஆனந்த் அவர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

**பயிற்சியாளர்கள்**

தமிழ்நாட்டின் மூத்த பத்திரிக்கையாளர் இந்து என்.ராம், இந்தியாவின் முதல் இன்டர்நேசனல் மாஸ்டர் மானுவல் ஆரோன் அவர்களையும், குகேஷின் கனவை நனவாக்க தங்களை அர்ப்பணித்துக்கொண்ட குகேஷின் பெற்றோர்கள் ரஜினிகாந்த், பத்மாகுமாரி அவர்களையும், குகேஷின் குடும்பத்தினரையும், நண்பர்களையும், அவரின் பயிற்சியாளர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

வேலம்மாள் பள்ளியின் மாணவ, மாணவிகள் உங்கள் அத்தனைப்பேரையும் வருக, வருக என வரவேற்கிறேன். இங்கு வருகை தந்துள்ள ஏராளமான செஸ் கிராண்ட் மாஸ்டர்ஸ் மற்றும் இன்டர்நேசனல் மாஸ்டர்களையும், எதிர்கால வீரர்களான, என் மனதிற்கு மிகவும் நெருக்கமான தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய (எஸ்.டி.ஏ.டி) மாணவர்களையும், தமிழ்நாடு செஸ் கூட்டமைப்பு நிர்வாகிகளையும்,

செஸ் ஆர்வலர்கள், செஸ் ரசிகர்கள், எந்நேரமும் ஓயாது உழைத்துக்கொண்டு இருக்கின்ற எஸ்.டி.ஏ.டி அலுவலர்களையும், பணியாளர்களையும், பத்திரிக்கை மற்றும் ஊடக நண்பர்களையும் வருக, வருக என வரவேற்கிறேன்.

இவ்வாறு அவர் விழாவுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசினார்.

---

### அண்ணா சாலையில் புதிதாக பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ள

# “கோ-ஆப்டெக்ஸ் கோலம்” விற்பனை நிலையம்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – விற்பனையைத் தொடங்கி வைத்தார்!

*சென்னை, டிச.18-*

*தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.12.2024) சென்னை அண்ணாசாலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையின் எதிரில், ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் புதியதாக பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ள “கோ-ஆப்டெக்ஸ் கோலம்” விற்பனை நிலையத்தை திறந்து வைத்து, முதல் மற்றும் பொங்கல் திருநாள் சிறப்பு தள்ளுபடி விற்பனையை தொடங்கி வைத்தார்.*

*தமிழ்நாடு அரசின் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் 1935-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, இந்தியாவின் மிகப்பெரிய மாநிலத் தலைமைக் கைத்தறிக் கூட்டுறவுச் சங்கமாக திகழ்கிறது. மேலும், தமிழ்நாடு முழுவதும் உள்ள 1,114 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் சிறந்த தயாரிப்புகளை “கோ-ஆப்டெக்ஸ்” என்ற வணிக முத்திரை மூலம் வணிகப்படுத்தும் முன்னணி நிறுவனமாகச் செயல்பட்டு வருகின்றது.*

*கோ-ஆப்டெக்ஸின் அனைத்து கைத்தறித் தயாரிப்புகளும் இந்திய அளவில் டெல்லி, மும்பை, கல்கத்தா, பெங்களூர் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் அமைந்துள்ள 150 நிலையங்களின் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.*

*பட்டு மற்றும் பருத்தி ரகவகைகளின் பாரம்பரிய மற்றும் நாகரீக சமகால வடிவமைப்புகளைக் கொண்டு சிறந்த கைத்தறி ரகங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தி விற்பனை செய்கின்றது.*

*கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், தீபாவளி, பொங்கல் உள்ளிட்ட முக்கியப் பண்டிகைக் காலங்களில் புதிய வடிவமைப்பு ரகங்களை வெளியிட்டு வாடிக்கையாளர்களின் மனங்களை எப்போதும் கவர்ந்து வருகிறது. பாரம்பரிய பட்டு மற்றும் பருத்தி ரகங்களில் புதுமையான கருத்துக்கள் கொண்ட வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களுடன் பல மதிப்பு கூட்டப்பட்ட ரகங்களை அறிமுகப்படுத்தி வருகிறது.*

*சென்னை அண்ணாசாலையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலை எதிரில் பிரமாண்டமான கோலம் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையமானது, ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் 8,000 சதுர அடி பரப்பளவில் நான்கு தளங்களுடன் லிப்ட் மற்றும் வாகன நிறுத்தும் வசதியுடன் கட்டப்பட்டுள்ளது. முதல், இரண்டாம், மூன்றாம் தளங்கள் தலா 2,100 ச.அடி பரப்பளவிலும், நான்காம் தளம் 1,700 ச.அடி பரப்பளவிலும் என மொத்தம் 8,000 சதுர அடி பரப்பளவில் பிரமாண்டமாக கட்டப்பட்டுள்ளது.*

*2024-ஆம் ஆண்டு பொங்கல் திருநாள் பண்டிகை காலத்தில் ரூ.43.46 கோடி மதிப்பீட்டிலான கைத்தறி, பட்டு ரகங்கள் கோ-ஆப்டெக்ஸ் மூலமாக விற்பனை செய்யப்பட்டன. நடப்பாண்டு (2025) பொங்கல் திருநாள் பண்டிகை காலத்திற்கு ரூ.50.00 கோடியாக சிறப்பு விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பொங்கல் திருநாள் பண்டிகை சிறப்பு விற்பனையையொட்டி அனைத்து பட்டு மற்றும் பருத்தி ரகங்களுக்கு 30 சதவீத சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகின்றது.*

*இந்த நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, கோ-ஆப்டெக்ஸ் செயலாட்சியர் தீபக் ஜேக்கப், துணைமேயர் மு.மகேஷ் குமார், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.*





காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன் ஏற்பாட்டில் வரதராஜபுரம், கரசங்கால், படப்பை, வட்டம்பாக்கம், சென்னகுப்பம், வளையகரணை ஆகிய ஊராட்சிகளில் கழக கொடியேற்றி கல்வெட்டுகள் மற்றும் பயணிகள் பேருந்து நிறுத்த நிழற்குடைகளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். உடன் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

### திருப்பத்தூர், கல்லல் பகுதிகளில்

# ரூ.13 கோடியில் பல்வேறு நலத்திட்டப் பணிகள்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

சிவகங்கை, டிச. 18 -

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட தேவாரம்பூர் ,காட்டம்பூர்ஆகிய பகுதிமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் தீயணைப்பு மற்றும் மீட்புத்துறைகளின் சார்பில் ரூபாய்217.17 லட்சம் செலவில் புதிய தீயணைப்பு நிலையம் கட்டிட அடிக்கல் நாட்டு விழா கல்லல் ஒன்றியம் முத்துப் பட்டி பாகனேரி சாலையில் ரூபாய் 10.18 லட்சத்தில் சருகனி ஆற்றின் அருகே உயர் மட்ட குறுக்கு பாலம் ஆக மொத்தம் ரூபாய் 12கோடியே 95 லட்சத்தில் அடிக்கல் நாட்டு விழா, மற்றும் கல்லல் ஒன்றியம் அரண்மனை சிறுவயலில் ரூபாய் 6.50 லட்சத்தில் பயணிகள்நிழற்குடை திறப்பு விழா மாவட்ட ஆட்சியர்திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. புதிய திட்டப் பணிகளை துவக்கி வைத்தும், முடிவுற்ற பணிகளை மக்களுக்கு அர்ப்பணித்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் சிறப்புரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் திட்ட அலுவலர் திருமதி வானதி, மாவட்ட தீயணைப்பு அலுவலர் பொறுப்பு அப்பாஸ், உதவி தீயணைப்பு அலுவலர் செந்தில்குமார், ஒன்றிய குழு தலைவர்கள் எஸ்.சண்முகவடிவேல், திருமதி சொர்ணம் அசோகன்,கல்லல் ஒன்றிய குழு துணைத் தலைவர் நாராயணன், மாவட்ட கவுன்சிலர் ஏ.டி.என்.ரவி ஊராட்சி மன்ற தலைவர்கள் பெருமாள், அருண், ஒன்றிய கவுன்சிலர்ரேவதி நெடுஞ்செழியன், பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலராணி நாராயணன், வட்டார வளர்ச்சி அலுவலர் ரத்தினவேல் , பொதுக் குழு உறுப்பினர் கரு.அசோகன், ஒன்றிய செயலாளர்கள் நா.நெடுஞ்செழியன்,, குன்னக்குடி சுப்பிரமணியன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார் உட்பட அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.






தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, மெக்சிகோவில் குவாதரகாரா மாநகரில் சிறப்பான நிகழ்ச்சி நடைபெற்றது. வெளிநாடுவாழ் தமிழ்இந்தியர்கள் அமைப்பு (NRTIA) நிகழ்ச்சியை நடத்தியது. கைப்பந்துப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள் வழங்கப்பட்டன. விழா ஏற்பாடு : ஒருங்கிணைப்பாளர் கார்த்திக் மற்றும் துணை ஒருங்கிணைப்பாளர்கள் கணேசன், நாகார்ஜ்ன், ஷாநவாஸ், கவுதம், ஆதி, கேசவன், திவாகர் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.